# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,114 — 1960 අප්‍රේල් 23 වැනි සෙනසුරාදා — 23.4.1960

12,114 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 23 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

மா. தே. க. இல : C. 214/55

### இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளை, 1946

1946 ம் ஆண்டின் இலங்கைப் (பாராளுமன்றத் தேர்தல்கள்) அரசப் பேரவைக் கட்டளையின் 25 (1) ம் பிரிவால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மகாதேசாதிபதியாகிய, ஒலிவர் ஏணஸ்ற் குணதிலக்க ஆகிய நான்—

(அ) இத்துடனிருக்கும் அட்டவணையின் 2 ம் நிரையிற் குறிப்பிடப்பட்டிருப்பவர்களை அதன் முதலாம் நிரையிற் குறிப்பிடப்பட்டிருக்கும் தேர்தற் றொகுதிகளுக்கு தெரிவத்தாட்சி உத்தியோகத்தராகவும் ;

(ஆ) இவ்வட்டவணையின் 3 ம் நிரையிற் குறிப்பிடப்பட்டிருப்பவர்களை அதன் 2 ம் நிரையிற் குறிப்பிடப்பட்டிருக்கும் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர் தமது தேர்தற் கடமைகளை ஆற்றுவதில் அவருக்கு உதவி செய்வதற்கும் இவ்வறிவித்தல் மூலம் நியமித்து ;

(இ) முன்னே சொல்லப்பட்ட 1 ம் நிரையிற் காட்டப்பட்டுள்ள தேர்தற் றொகுதிகள் சம்பந்தமாக அப்பிரிவின் பிரகாரஞ் செய்யப்பட்டிருப்பனவும், 1959 ம் ஆண்டு கார்த்திகை (நொவம்பர்) மாதம் 3 ந் தேதி வெளிவந்த 11,937 ம் இலக்க விசேட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருப்பனவு மான தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர், உதவித் தெரிவு அத்தாட்சி உத்தியோகத்தர்கள் ஆகியவர்களின் நியமனங்களை இதனால் நீக்கிவிடுகிறேன்.

ஓ. ஈ. குணதிலக்க,
மகா தேசாதிபதி.

கொழும்பு,
1960 ம் ஞூ எப்பிரில் மீ 23 ந் உ.

#### அட்டவணை

| 1<br>தேர்தற் றொகுதி | 2<br>தெரிவத்தாட்சி உத்தியோகத்தர் | 3<br>உதவித் தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள் |
|---|---|---|
| இல. 121—பிபிலை,<br>இல. 129—மொனருகலை | அரசாங்க அதிபர், பரிபாலன மாவட்டம், மொனருகலை | மாவட்ட காணி உத்தியோகத்தர், மொனருகலை கச்சேரி.<br>உதவித் தேர்தல் உத்தியோகத்தர், மொனருகலை மாவட்டம். |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



1*——J. N. R 9356 (4/60)